திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் சம்பளப் பட்டியலின்படி பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்களுக்குப் தமிழக அரசுப் பணியாளர்களுக்கு இணையாக ஊதியம் உயர்த்தப்பட்டு அரசு அவ்வப்போது அளிக்கும் சலுகைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள சிந்தலக்கட்டை, ஒட்டப்பிடாரம், கோரம்பள்ளம், பேய்குளம், துப்பாசுப்பட்டி ஆகிய கண்மாய்களில், தமிழ்நாடு அரசால் 3 அடி ஆழத்திற்கு மட்டும் கரம்பு மண் அள்ளுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், விதிமுறைகளுக்கு மாறாக 15 அடி முதல் 20 அடி ஆழம்வரை மண் அள்ளுவதால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, இன்றுதான் என்னுடைய அறைக்கு வந்து, Notice கொடுத்திருக்கிறீர்கள். It is my under examination. Concerned Minister இப்பொழுது அவையில் இல்லை. அதனால் இதனை எடுத்துக் கொள்வது பற்றி பின்னர் பரிசீலிக்கப்படும் என்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோருக்கும் வாய்ப்புத் தருகிறேன், please sit down.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமத்தை சூது கவ்வினாலும் இறுதியில் தர்மமே வெல்லும்" என்ற **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் நீங்கள் என்னிடம் அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை, Please sit down. (குறுக்கீடு) நீங்கள் அறிவிப்பு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2012 மே 7] [பேரவைத் தலைவர்]

கொடுத்துவிட்டுப் பேசுங்கள், Please sit down. அது அவைக் குறிப்பில் இருக்காது. (குறுக்கீடு) Please, நீங்கள் காலையில் என்னிடம் அறிவிப்பு கொடுத்திருக்க வேண்டும்.

(ஆ) சத்துணவு ஊழியர்கள் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரமே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தேன். தமிழகத்தில் சத்துணவுக் கூடங்களில் பணிபுரியக்கூடிய ஊழியர்கள், சமையலர்கள், உதவியாளர்கள் 72 மணி நேரம் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். அவர்களுடைய ஊதியம் மற்றும் விலை உயர்வுக்கேற்ற சத்துணவுக்கு வழங்கப்படக்கூடிய பொருட்களினுடைய விலை உயர்வு இவற்றையெல்லாம் கேட்டு அவர்கள் அந்தப் போராட்டத்தை நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தை மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் அவர்களும் கவனித்திருப்பார்கள் என்று அறிகின்றேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசின் கவனத்திற்குக் கொண்டுவாருங்கள்.

செல்வி கே. பாலபாரதி: ஆகவே, அந்த ஊழியர்களை அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஏப்ரல் மாதம் 24, 25 தேதிகளில் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். அதன் தொடர்ச்சியாக துறைமூலம் உடனடியாக ஒரு கூட்டம் நடத்தப்பட்டு, மாவட்ட

நிருவாகத்திடம் இதுகுறித்து விவரம் கேட்கப்பட்டது. மாவட்ட நிருவாகம் திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களிலும் மற்றும் பிற மாவட்டங்களிலும் மொத்தமாக சத்துணவு ஊழியர் சங்கத்தினர் 456 நபர்கள் மட்டுமே கலந்துகொண்டுள்ளனர் என்று குறிப்பிட்டார்கள். மொத்தமாக மாநிலத்தில் 43,787 மையங்களில் 1,06,677 ஊழியர்கள் பணியாற்றுகின்றார்கள். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) மூலமாக உண்ணாவிரதம் மேற்கொண்ட சத்துணவு ஊழியர்கள் சங்கத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தி, உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு அரசின் மூலமாக கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்த அடிப்படையில் அவர்களுடைய கோரிக்கைகள் அரசின் கவனத்தில் இருக்கின்றது. அந்தக் கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று இந்த அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், நீங்கள் எல்லோரும் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள்.* Please sit down, Mr. Rengarajan. Please sit down, Mr. Kalaiarasu. *நீங்கள் எல்லோரும் அறிவுப்பு கொடுத்திருக்கிறீர்கள்.* It is under my examination. Please sit down. Reply *வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். இன்றைக்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டதுபோல, அதை எடுத்துக்கொள்கிறேன். உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.* Please sit down. *உட்காருங்கள் திரு. முருகவேல்.*

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) பவானிசாகர் குடியுரிமைப் பயிற்சி நிலையத்தை நவீன வசதிகள் கொண்டதாக மாற்றியமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*